**தலைப்பு 295 – வாணிப திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வாணிப திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வாணிப திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 ஒக்டோபர் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் வாணிப திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஒக்டோபர் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாணிப திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. மேலும், இக்காரணத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையின் பிரமாணங்களுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் சார்பாக வருமானம் சேகரிக்கும் ஏனைய திணைக்களங்களால் அவ்வருமானம் திறைசேரியினால் பெறப்பட்ட கட்டுப்பணமாகக் கருதப்பட்டு மொத்த நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட வேண்டுமாயினும், திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 90,297,873 ஆனது வரியல்லாத வருமானங்கள் மற்றும் வேறு விடயங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் சரிப்படுத்துவதற்கு இணங்குகின்றேன். |

### 1.6.2 அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கு சம்பந்தமான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச ஊழியர்களின் முற்பண "பீ" கணக்கில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் மீதி மற்றும் திறைசேரி கணனிப் பதிவுகளின் பிரகாரம் மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 419,541 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது இவ்வேறுபாடு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | அரச ஊழியரின் முற்பண "பீ" கணக்கின் திணைக்களப் புத்தகத்தில் காட்டப்பட்ட மீதி மற்றும் திறைசேரிக் கணனிப் பதிவுகளின் மீதி என்பன சமனாக இருக்க வேண்டியமை. | இவ்வேறுபாடு 2005 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே பேணப்பட்டு வருவதுடன் மற்றும் எதிர்வரும் வருடங்களில் சரிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரமாணங்களின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயம் சம்பந்தமாக உறுதிப்படுத்தல் வேண்டப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான ஆக்கபூர்வ உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வத் தன்மையைக் குறித்து காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமையலாக முறைமையினை பயனுள்ளதாகப் பேணப்படுவதற்கான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதுடன் அம்மீளாய்வுகளை எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாட்டின் படி நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இது சம்பந்தமாக எதிர்காலங்களில் கணக்காய்வு தலைமை அதிபதிக்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வு செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலத்திற்குள் தயாரிப்பதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அறிக்கையின் 2.4(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அத்தேவைப்பாடு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு சரியான முறையில் செயற்படுத்தப்படுவதற்காக பயனுள்ள முறைமையொன்றை உருவாக்குவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 2.4(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பின் படி அத்தேவைப்பாடு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | உள்ளகக் கணக்காய்வு ஒன்றை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் உப பிரிவு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படுகின்றேன் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒன்பது மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 3 மூலதனச் செலவு விடயங்கள் சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 44,235,000 ஆன ஒதுக்கத்தில் ரூபா 39,810,639 ஆன மொத்தத் தொகையே பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் ரூபா 4,424,361 அதாவது 10 சதவீதம் எஞ்சியது. அவ்வாறான ஒவ்வொரு செலவு விடயங்களினதும் மிகுதியானது 6 சதவீதம் தொடக்கம் 69 சதவீதம் வரையிலான வீச்சைக் கொண்டதாக இருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் பிழையற்ற செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | ஏற்பாடுகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட்டமையால் எஞ்சியதாகக் காணப்பட்டது. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் செலவின விடயங்கள் சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சியதாக பொறுப்புக்களுக்கு உடன்பட முடியாதாயினும் 3 மீண்டு வரும் செலவின விடயங்கள் சம்பந்தமாக மிகுதியை விஞ்சியதாக காணப்பட்ட மொத்த தொகை ரூபா 2,733,309 ஆனது பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் செலவின விடயங்கள் சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சியதாக பொறுப்புக்களுக்கு உடன்படாமல் இருக்க வேண்டியமை. | எதிர்காலங்களில் இந்நிலைமை ஏற்படுவதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உடன்படுகின்றேன். |
| (ஆ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய மற்றும் 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் (iii) ஆம் குறிப்புரையின் கீழ் | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய மற்றும் 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் | பொதுவாக வருடத்திற்குள்ளான பொறுப்புக்கள் வருடத்திற்குள்ளேயே தீர்த்து வைக்கப்படுகின்றன. ஆயினும், |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்களும் கடன்பாடுகளுக்குமான கூற்று திறைசேரியினால் ஒவ்வொரு செலவின விடயங்களுக்குமாக பிரசுரிக்கப்பட்ட பொறுப்புக்கள் மட்டும் கடன்பாடுகளுக்குமான கூற்றுடன் உடன்பட்டிருக்க வேண்டுமாயினும் ஆனால் அப்பதிவேடு 2 இற்கிடையில் ரூபா 3,124,865 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 3.4 இன் (iii) ஆம் குறிப்புரையின் கீழ் காட்டப்படும் பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் கூற்று, திறைசேரியினால் ஒவ்வொரு செலவின விடயங்களுக்குமாக பிரசுரிக்கப்படுகின்ற பொறுப்புக்கள் மற்றும் கடன் பாடுகளுக்குமான கூற்றுடன் இணங்கியதாக இருக்க வேண்டியமை. | வருடத்திற்காக ஒதுக்கப்படும் ஏற்பாடுகளில் வருடத்தின் ஆரம்பத்தில் முன்னைய வருடத்திற்கான நிலுவைப் பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் செய்யப்படுவதால் வருடத்திற்கான தேறிய ஒதுக்கத்தில் குறைவொன்று காணப்படுவதுடன் மற்றும் இது ஒவ்வொரு வருடத்திற்குமான தொடர் செயன்முறை என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை 2017 சனவரி 13 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் 2018 மார்ச் 05 ஆந் திகதிய (1)/01/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 சனவரி 13 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் 2018 மார்ச் 05 ஆந் திகதிய (1)/01/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அடுத்து வரும் மாதத்திலிருந்து முன்னேற்ற அறிக்கையானது குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | 2017 நவம்பர் 7 ஆந் திகதிய BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டிற்கான இனங்காணப்பட்ட செயலாற்று | தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் 2017 நவம்பர் 7 ஆந் திகதிய BD/CBP/4/1/2- | தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் 2017 நவம்பர் 07 ஆந் திகதிய BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| | இலக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பிரகாரம் 2020 ஆம் வருடத்திற்காக செயலாற்றல் இலக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டவாறு 2018 இன் 02 ஆம் இல்க Anti-Dumping and Countervailing Duties Act மற்றும் 2018 இன் 3 ஆம் இலக்க SafeGuard Measures Act தொடர்பாக அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமாயினும், அதிலே கூறப்பட்டுள்ள வர்த்தகம் தொடர்பான குற்றங்கள் குறித்து விசாரணை நடாத்துவதற்காக வர்த்தக தீர்வுச் சட்டங்களை நிறுவுதலுக்கான நடவடிக்கைககள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உலக வர்த்தக நிறுவனத்தின் அடிப்படையின் பிரகாரம் தற்போது வரைவுபடுத்தப்பட்ட பிரமாணங்கள் சட்ட வரைவுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் வர்த்தமானி பிரசுரிக்கப்படும். |
| (ஈ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி வெளிநாட்டுத் தூதகரங்களுக்கு நியமிக்கப்பட்ட திணைக்களத்தின் அலுவலகர்களினால் சர்வதேச வர்த்தகம், சுற்றுலாத்துறை மேம்படுத்தல், முதலீடுகள் மேம்படுத்தல் போன்ற திணைக்களத்தின் நோக்கங்களுக்கு போதியளவு பங்களிப்பு வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அவ்வலுவலகங்களின் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | வெளிநாட்டுத் தூதரகங்களில் கடமையாற்றும் வாணிப அலுவலகர்களால் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கான தேவையான நிதி மற்றும் ஏனைய வசதிகளை அளித்தல் இலங்கையின் ஏற்றுமதி மேம்படுத்தல் நிறுவகத்தில் தங்கியுள்ளது. எனவே, அந்நிறுவனம் நிதியளிக்காமையினால் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் எதிர்பார்த்தபடி செயற்படுத்துவதற்கு முடியாமை காணப்பட்டது. |
| (உ) | 28 வெளிநாட்டுத் | வெளிநாட்டுத் | 2018 ஆம் ஆண்டின் |

| | | |
|---|---|---|
| தூதரகங்களுக்காக திணைக்கள அலுவலகர்கள் நியமிக்கப்பட்ட போதிலும், இலங்கையின் ஏற்றுமதிகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை உலகத்தின் 05 பெரிய நாடுகளுக்கு மட்டுமே மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டது. ஏனைய ஒவ்வொரு நாடுகளுக்குமான ஏற்றுமதி வர்த்தகப் பிரதிநிதித்துவம் 5 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. அதன் பிரகாரம் அந்நாடுகளில் நியமிக்கப்பட்ட திணைக்கள அலுவலகர்களினால் போதியளவு செயலாற்றுகை அடைந்தமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | தூதரகங்களுக்கு பிரதிநிதித்துவத்தின் மூலம் வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | ஏற்றுமதி மற்றும் இறக்குமதி புள்ளிவிபரப்படி வாணிப அலுவலகர்கள் கடமை புரியும் நாடுகளில் இலங்கையின் ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளன. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களம் சார்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று இல்லாதிருப்பதுடன் உள்ளகக் கணக்காய்வாளருக்கு மீளாய்வாண்டின் இறுதிவரையில் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) உப பிரிவிற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவியணியினர் பற்றாக்குறையினால் உள்ளகக் கணக்காய்வு தாபிக்கப்படுவதற்கு வசதி இல்லாமையுடன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. |

## 5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த இடமாற்றத்தின் கீழ் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட 31 ஒன்றிணைக்கப்பட்ட சேவைக்கான பதவியணியினர் 6 வருடங்கள் தொடக்கம் 34 | 2017 யூன் 30 ஆந் திகதிய ஒன்றிணைந்த சேவைகள் சுற்றறிக்கை இல | இத்திணைக்களம் பிரசித்தி பெற்றிருக்காமையினால் இடமாற்றலாகி வருவதற்கு அலுவலகர்கள் விருப்பமின்மையால் |

| | | |
|---|---|---|
| வரையானக் காலப்பகுதிக்குள் இடமாற்றம் செய்யப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையில் திணைக்களத்திலேயே கடமையாற்றுகின்றனர். இதன் பிரகாரம் ஒன்றிணைந்த சேவைகள் சுற்றறிக்கை 03/2017 ஆம் இலக்க மற்றும் 2017 யூன் 30 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | 03/2017 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடமையாற்றும் ஊழியர்களுக்கு இடமாற்றலாகிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படவில்லை. |